திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த விவர அறிக்கைப்படி பார்த்தால் வடாற்காடு மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை 29,81,260 ரூபாய் 48 பைசா கொடுத்திருக்கிறது. கோயம்புத்தூரில் இருந்து 6 லட்சத்தி சொச்சம் கிடைத்திருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டம் 12 லட்சம் சொச்சம் கொடுத் திருக்கிறது. சேலம் 10 லட்சம் சொச்சம் கொடுத்திருக்கிறது. இதில் செங் கற்பட்டு மாவட்டம் கொடுத்தது 12 லட்சம். ஆனால், ரூபாய் பதினேரு லட்சத்து எண்பத்தி எட்டாயிரம் ரூபாய் ரோடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிகமாகக் கொடுத்திருக்கும் வடாற்காடு மாவட்டத்திற்குப் போது மான பாலங்களோ, ரோடு வசதிகளோ செய்து தரப்படவில்லை. ஆகவே அங்கே இருக்கும் ஷேர் ஹோல்டர்ஸ் எவ்வளவு தூரம் மனம் புண்பட்டு இருக்கிருர்கள் என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? இத்துறையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் இரண்டு மூன்று கேள்விகளைச் சேர்ந்தாற்போல் போட்டிருக்கிருர்கள். இருந்தாலும் பதில் சொல்கிறேன். வடாற்காடு மாவட்ட சர்க்கரை ஆலை 21–11–1960-இலும் மதுராந்தகம் ஆலை 22-3-1963-இலும் துவக்கப்பட்டன. ஆனால் செங்கற்பட்டு மாவட்டம் அதிகமாகச் செலவிட்டது என்ருல் அதற் கான காரணம் நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஏற்கனவே அந்த மாவட்டத்தில் பொறுப்பில் இருந்தவர்கள் நல்ல அக்கறை காட்டி அளிக்கப்பட்ட தொகையை வைத்துக்கொண்டு கணிசமாக வசதிகள் செய்து கொடுத்திருக்கிருர்கள். வடாற்காடு மாவட்டத்திலும் கூடுமானவரை சர்க் கார் தீவிர கவனம் செலுத்தி ஆவன செய்யும்.

திரு. கே. விநாயகம் : ஆம்பூரில் இருக்கும் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு வரவேண்டுமென்ருல், அங்கிருக்கும் ரயில்வே லைனைத் தாண்டித் தான் வரவேண்டி இருக்கிறது. அப்போதைக்கப்போது அங்கிருக்கும் கேட் சாத்தப்பட்டு விடுவதால் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு வருவது தடைபடு கிறது. எனவே, இந்தப் பணத்திலிருந்து ஒரு பாலம் அமைக்க, மத்திய சர்க்காருக்கு இந்த சர்க்கார் யோசனை கூறுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர் களுடைய யோசனை நல்ல யோசனைதான். ஆனல் 1967–68–ம் ஆண்டுக் குரிய திட்டத்தில் இதற்கு வசதி இல்லை. ரூபாய் 30 லட்சம்தான் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

அரிசன விடுதிகள், சீர்காழி வட்டம்

*379 வின—**திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய ஹரிஜனநல செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சீர்காழி தாலுக்காவிலுள்ள அரிசனமாணவ, மாணவிகளுக்கான விடுதிகள் கட்டுவது சம்பந்தமாக தயார் செய்துள்ள திட்ட நகல் அமைச்சர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதா ?

(இ) ஆம் எனில் நடப்பு ஆண்டிலேயே மேற்படி கட்டடங்களைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சீர்காழியில் அரசினர் மாணவர் விடுதி, அரசினர் மாணவியர் விடுதி ஆகியவற்றிற்கும் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி : இந்தப் பிரசினை கடந்த எட்டு ஆண்டு கால மாக பரிசீலிக்கிறேம், பரிசீலிக்கிருேம் என்று முன்பிருந்த நிர்வாகத்தால் சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தனியாக இயக்கு நர் இருந்தால் நன்ருக இருக்குமென்று சொல்கிருர்கள். ஆகவே, இந்த அரசாங்கம் ஜுனியர் கிரேட் டைரக்டர்களை இந்தக் கமிட்டியை விட்டு எடுத்து விட்டு ஸீனியர் கிரேட் ஐ.ஏ.எஸ். ஆபீஸர்களை எஜுகேஷன் விங்கில் போட்டால் சரியாக இருக்கும். இதற்குரிய திட்டத்தை அரசாங் கம் ஆராயுமா ?

1967 ஜூலை 17]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தாமதப்படுவதற்கு கனம் அங்கத்தினர் கூறுவது காரணம் அல்ல. ஆனால் அந்த இடங்களில் எல்லாம் விடுதிகள் ஏற்படுத்த வேண்டுமென்று, கலெக்டர்கள் இடமிருந்தது ஆர். டி. ஓ.க்களுக்கு, புறம்போக்கு நிலங்களில் கட்டுவதற்கான திட்டங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. ஆர்.டி.ஓ.-க்களிடமிருந்து இந்தக் கணக்குகள் வந்தவுடன் காவேரி டிவிஷன் எக்ஸிகியூடிவ் இன்ஜினியர்கள் அந்த விடுதியைக் கட்டுவதற்கு திட்டம் தீட்டித் தருவார்கள். உடனடியாக அரிசனங்களுக்கு விடுதிகள் கட்டுவதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யும்.

கைதிகளுக்கு உணவு.

* 380 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :
திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : } மதிப்பிற்குரிய
திரு. டி. மார்டின் :

சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறையிலுள்ள கைதிகளுக்குப் போதுமான அளவு சரியான உணவு கொடுக்கப் படுவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு வி. கே. கோதண்டராமன்: ஸார், யானை கொழுத்தால் வாழைத் தண்டு. மனிதன் கொழுத்தால் கீரைத்தண்டு என்பது பழமொழி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பழமொழி கேள்வியாகாது, நேரம் இல்லாத காரணத்தால், அங்கத்தினர்களை ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். எனவே, பழமொழிகள் சேர்க்காமல் கேள்விகளை மட்டும் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு வி. கே. கோதண்டராமன் : ஜெயிலில் நல்ல உணவு கொடுக்கப்படுவது இல்லை. அதனால் கைதிகளின் உடல் நலம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, வாரத்தில் ஒரு நாளோ, இரண்டு நாளோ கறி, மீன் போன்ற சத்துள்ள உணவு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கீரையில் அதிகச் சத்து இருப்பதாக விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். ஆகவே, ஜெயிலில் கீரையுடன் உருளைக்கிழங்கு, தக்காளி ஆகியவையும் கொடுக்கிறோம்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : கீரை சத்துள்ளது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால், உணவுடன் புழுவையும், மண்ணையும், கீரை வேரையும் போடுவது நல்லதல்ல. அங்கு அளிக்கப்படும் குழம்பில் உலகத்தில் உள்ள எல்லா வஸ்துக்களும் இருக்கின்றன. ஆகவே அந்த நிலையை மாற்றி நல்ல உணவளிக்க சர்க்கார் நடவடிக்கை உடனடியாக எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் ரொம்ப நாட்களுக்கு முன்பு சிறையில் இருந்திருக்கிறார்கள் என நினைக்கிறேன். இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் இருப்பதில்லை.